தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 341/ந/2023
நாள் 04.01.2024

திரு. J. குமரவேல்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம். – எதிர் மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி, ராஜேஸ்வரி தெரு, கன்னியப்பா நகர், கதவு எண்.02/25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. குமரவேல் என்பவரின் 16.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.10.2023 அன்று பெறப்பட்டு 341/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி, ராஜேஸ்வரி தெரு, கன்னியப்பா நகர், கதவு எண்.02/25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. குமரவேல் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி, நெல்லிக்குப்பம் சாலையில் சமுதாய நலக்கூடம் அருகில் 10 கடைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதில் கடை எண்.14 ஐ நடப்பு நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திரு. ஜி.கே.லோகநாதன் என்பவர், தனது மனைவி திருமதி. சசிகலா என்பவரின் பெயரில் நகராட்சி கடையை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார். நகராட்சி தலைவர், துணைத்தலைவர், கவுன்சிலர் ஆகியோர் அவர்கள் பெயரிலோ, குடும்பத்தார் அல்லது பினாமிகள் பெயரிலோ அரசு சொத்துக்கள் வாங்கவோ / குத்தகைக்கு எடுப்பதோ கூடாது என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நோட்டரி வக்கீலாக உள்ள திரு. ஜி.கே.லோகநாதன் இந்த உண்மைகளை மறைத்து உள்ளாட்சி தேர்தலில் வெற்றிபெற்று அதன் பின்னரும் இந்த கடையை நடத்தி வந்துள்ளார்.

நான் சென்ற 27.01.2023 அன்று அவர்மீது புகார் தெரிவித்த காரணத்தினால் ஆணையாளராக இருந்த திரு. இளம்பரிதி என்பவரிடம் தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி அவசர அவசரமாக யாருக்கும் தெரியாமல் கடையை சரண்டர் செய்து, டெபாசிட் தொகையை திரும்ப பெற்றுக்கொண்டார். அரசு சொத்தை நகராட்சி துணைத்தலைவர் பதவியில் இருக்கும் ஒருவர் தனது குடும்பத்தார் பெயரில் அனுபவித்து வந்ததை உரிய நடவடிக்கை எடுத்து பதவியிழப்பு செய்யாமல், யாருக்கும் தெரியாமல் கடையை ஒப்படைப்பதும், அதே கடையை கவுன்சிலர்கள் யாருக்கும் தெரியாமலும், நகராட்சி மன்ற கூட்டத்தில் வைக்காமலும் திரும்ப வேறு ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருப்பதும் , இதற்கு முழு உடந்தையாக செயல்பட்டதும் நகராட்சி ஆணையர் திரு. இளம்பரிதி ஆவார்.

நன்கு சட்டம் தெரிந்த மற்றும் நோட்டரி வக்கீலாக உள்ள ஒருவர் அரசாங்க சொத்தை தன்குடும்பத்தார் பெயரில் வைத்திருந்ததை மறைத்து, பதவிக்கு வந்ததற்காக திரு. லோகநாதன் தகுதியிழப்பு செய்து பதவியை பறிக்கவும் , மற்றும் அதனை மறைத்து ஆணையர் உடந்தையாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் செயல்பட்ட குற்றத்திற்காக ஆணையர் திரு. இளம்பரிதி என்பவரை பணிநீக்கம் செய்ய வழக்காக இம்மனுவினை பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையாளர் தனது 05.12.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:—

"மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேரூராட்சிகள் மறுமலர்ச்சி திட்டத்தின் (APAMT) கீழ் 19 கடைகளுக்கும் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை ந.க.எண்.0073/2023/அ1, நாள் 04.01.2023—ன்படி 20.01.2023 அன்று ஏலம் விடப்பட்டது. இதில் மனுதாரர் தெரிவித்துள்ள கடை எண்.14—ம் அடங்கும். இந்த ஏலத்தில் திருமதி. சசிகலா என்பவர் கலந்துகொண்டுள்ளார். இவரால் அதிகபட்ச ஏலத்தொகையாக ரூ.7,800/— கோரப்பட்டுள்ளது. இவரது அதிகபட்ச ஏலத் தொகையினை நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.2, நாள் 25.01.2023—ன்படி நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி திருமதி. சசிகலா என்பவரின் 25.01.2023 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கடையை நடத்த விருப்பமில்லை எனத் தெரிவித்து இந்த ஏலத்தை இரத்து செய்யுமாறு கோரியதன் அடிப்படையில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.248/2023/அ1, நாள் 27.01.2023—ன்படி மேற்படி ஏலத்திற்காக செலுத்தப்பட்டுள்ள டேவணித் தொகையை பறிமுதல் செய்துகொண்டு குத்தகை இரத்து செய்யப்பட்டுள்ளது. மேற்படி குத்தகையை இரத்து செய்து நகர்மன்ற தீர்மானம் எண்.24, நாள் 31.03.2023—ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதற்கிடையில் மனுதாரர் திரு.ஜெ.குமரவேல் என்பவரின் 27.01.2023 நாளிட்ட கடிதத்திலும் மேற்படி ஏலத்தை இரத்து செய்யுமாறு கோரியுள்ளார்.

ஏலதாரரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள கடையை, ஏலம் எடுக்கப்பட்ட ஓரிரு தினங்களுக்குள் ஏல குத்தகையை ரத்து செய்தும், டேவணித் தொகை பறிமுதல் செய்யப்பட்டும் உள்ளது. மேலும் குத்தகைதாரருக்கு குத்தகை உத்தரவு ஏதும் வழங்கப்படாமலும் குத்தகையை ஒருநாள் கூட அனுபவிக்காத நிலையிலும் குத்தகை உரிமத்திற்கு நகர்மன்ற ஒப்புதல்

பெறப்பட்டு இரத்து செய்யப்பட்டுள்ளதால் மனுதாரர் கோரிக்கை மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் எழவில்லை.

மேற்படி கடைக்கான குத்தகை ரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் குத்தகைக்கு விட நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை ந.க.எண்.0073/2023/அ1–04, நாள் 11.08.2023–ன்படி, 24.08.2023 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட தினகரன் நாளிதழில் 14.08.2023 அன்று விளம்பரப்படுத்தப்பட்டது. மேலும் நகராட்சி அலுவலக விளம்பர பலகையிலும் ஒட்டி விளம்பரப்படுத்தப்பட்டது. அதன்படி 24.08.2023 அன்று பிற்பகல் 12.00 மணிக்கு ஏலம் நடைபெற்றத்தில் 1) திரு.எஸ்.முரளி, 2) திரு.ஹரிகிருஷ்ணன் மற்றும் 3) திரு. பரத் ஆகிய மூன்று நபர்கள் கலந்து கொண்டனர். இதில் அதிகப்பட்ச ஏலத் தொகையாக திரு.எஸ்.முரளி என்பவரால் ரூ.8,500/– கோரப்பட்டது. இது முந்தைய ஏலத் தொகையைவிட ரூ.700/– அதிகமாகும். எனவே, நகர்மன்ற தலைவர் அவர்களின் 29.08.2023ந் தேதிய முன் அனுமதியின்பேரில் 01.09.2023 முதல் மேற்படி ஏலதாரர் திரு. முரளி என்பவருக்கு குத்தகையை நடத்த அனுமதி அளித்து நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி அலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.747/2023/அ1, நாள் 31.08.2023–ன்படி உத்தரவு வழங்கப்பட்டு இக்குத்தகையை திரு. முரளி என்பவர் தொடர்ந்து நடத்தி வருகிறார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையரும் 04.12.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பின்னர் நிர்வாகக் காரணத்தினால் விசாரணை 06.12.2023 அன்று ஒத்திவைக்கப்பட்டது.**

**(4) மனுதாரர் திரு. ஜெ.குமரவேல் 06.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

''நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி 8வது வார்டு நகரமன்ற உறுப்பினராக உள்ளேன். நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி, நெல்லிக்குப்பம் சாலையில் சமுதாய நலக்கூடம் அருகில் 10 கடைகள் ஜனவரி 2023ல் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இதில் கடை எண்.14ஐ நகராட்சி துணைத் தலைவர் திரு. ஜி.கே.லோகநாதன் என்பவர் தனது மனைவி திருமதி. சசிகலா என்பவரின் பெயரில் நகராட்சி கடையை எடுத்திருந்தார். நகராட்சியில் பதவியில் உள்ளோர் யாரும் நகராட்சிக் கடைகளை குத்தகைக்கு எடுக்கக்கூடாது என நான் புகார் மனு அளித்ததைத் தொடர்ந்து மேற்கண்ட துணைத் தலைவர் அவசர அவசரமாக அப்போதைய ஆணையர் திரு. இளம்பரிதி என்பவரிடம் கடையை ஒப்படைப்பு செய்து டெபாசிட் தொகையை திரும்பப் பெற்றுக்கொண்டார். பின்னர் சிறிது நாட்களிலேயே அக்கடை எங்களுக்குத் தெரியாமல் நகராட்சியினரால் ஏலம் விடப்பட்டுள்ளது. மேற்கண்ட கடையை தனது சொந்தக்காரர் பெயரில் எடுத்துள்ள நகராட்சி துணைத் தலைவர், அக்கடையை உள்வாடகைக்கு விட்டுள்ளார். இவ்வாறு நகராட்சிக் கடைகளை நகராட்சியில் பதவியில் உள்ளோர் அவரது பெயரிலோ அல்லது சொந்தக்காரர் பெயரிலோ குத்தகைக்கு எடுப்பது குற்றம் என்பதால், மேற்கண்ட துணைத் தலைவர் திரு. ஜி. கே. லோகநாதன் என்பவரின் பதவியினை, பதவி நீக்கம் செய்திட ஆவன செய்யுமாறும், மேலும் அவருக்கு உடந்தையாக செயல்பட்ட ஆணையர் மீது நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்டவாறு சட்ட விரோதமாக விடப்பட்ட குத்தகையை ரத்து செய்யவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட கடைகளுக்கான குத்தகை ஏலம் தொடர்பாக வைக்கப்பட்ட மன்றப் பொருள், ஏலம் மற்றும் மறு ஏலம் விடப்பட்டதற்கான அறிக்கை ஆகியவற்றின் நகல்களை இம்முறை மன்றத்தல் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) 06.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சி ஆணையர் வர இயலாததால் விசாரணையை 11.12.2023 அன்று மேற்கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அதன்படி எதிர்மனுதாரரான நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையர் மற்றும் மேலாளர் ஆகியோர் 11.12.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளனர்.

"செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகராட்சி, நெல்லிக்குப்பம் சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான 19 கடைகளுக்கு 23.1.2023 அன்று ஏலம் விடப்பட்டு அதில் திருமதி சசிகலா என்பவர் ஏலத்தில் கலந்துக்கொண்டு, அவர் அதிகத் தொகையில் ஏலம் கேட்டதால் அவருக்கு நகர்மன்ற தீர்மானத்தின்படி 14ம் எண் கொண்ட கடை ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஏலதாரர், மேற்கண்ட ஏலத்தொகையை 25.01.2023 அன்று வங்கி வரைவோலையாக செலுத்தியுள்ளார். அதன் பின்னர் தனக்கு கடையை நடத்த விருப்பமில்லை எனத் தெரிவித்து மேற்கண்ட ஏலத்தை இரத்து செய்திடவேண்டி அன்றைய தினமே அதாவது 25.1.2023 அன்று மேற்கண்ட திருமதி சசிகலா என்பவர் நகராட்சிக்கு கடிதம் அளித்ததைத் தொடர்ந்து அன்னாரது டேவணித் தொகையை ஏலதாரருக்கு திருப்பி அளிக்காமல் மேற்கண்ட குத்தகை 27.01.2023 அன்று இரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்கு 31.03.2023 நாளிட்ட நகர்மன்ற தீர்மானம் எண்.24 அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) பின்னர் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகரமன்ற துணைத் தலைவர் திரு. ஜி.கே. லோகநாதன் என்பவரும் 21.12.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.12.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

7) 21.12.2023 அன்று மேற்கொள்ளப்பட்ட விசாாணையில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திரு. ஜி.கே. லோகநாதன் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்பித்துள்ளார்.

"செங்கல்பட்டு மாவட்டம் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சிக்கு சொந்தமான நெல்லிக்குப்பம் சாலையில் அமைந்துள்ள கடைகளில் 1 கடையை ( கடை எண். 14 ) எனது மனைவி திருமதி சசிகலா அவர்கள் எனக்குத் தெரியாமல் அவரது பெயரில் அட்வகேட் அலுவலகம் வைப்பதற்கு குத்தகைக்கு எடுத்துவிட்டு, அதன் பின்னர் அக்கடை அட்வகேட் அலுவலகம் அமைப்பதற்கு போதிய இட வசதி இல்லாத காரணத்தால் அதனை ஓரிரு நாட்களிலேயே நகராட்சியிடமே திரும்ப ஒப்படைவு செய்யும்போதுதான் அதன் விவரம் எனக்கு தெரியவந்தது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக எனது கூடுதல் விளக்கத்தினை இம்முறை மன்றத்தில் அளித்திட 26.12.2023 வரை கால அவகாசம் வழங்கிடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

8) நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திரு. ஜி.கே. லோகநாதன் என்பவர் தனது வாக்குமூலத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, தனது 26.12.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது கூடுதல் விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகரமன்றத்தில் துணைத்தலைவராக இருக்கின்றேன். நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர். நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரமன்ற உறுப்பினராக இருந்துவரும் திரு. ஜெ. குமரவேல் அவர்களின் கடந்த 16.10.2023 தேதியிட்ட புகார் மனுவின் பேரில் இம்முறைமன்ற நடுவம் எனக்கு அனுப்பிய அழைப்பாணை கடந்த 18.12.2023–ம் தேதியில் கிடைக்கப்பெற்றது. இந்த அழைப்பாணையோடு இணைக்கப்பட்டிருந்த புகார் நகல்களையும் படித்துப் பார்த்தேன்.

அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவையாகும். 20.01.2023 அன்று நடைபெற்ற நகராட்சி கடைகள் ஏலத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. அன்றைய தேதியில் எனது மனைவி சுமார் 20 வருடங்களுக்கு மேலாக செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணிபுரிந்து வரும் திருமதி. சசிகலா என்பவர் எனக்கு தெரியாமல் அவருடைய சுய விருப்பத்தின் பேரில் தன்னுடைய சொந்த செலவில் மேற்படி ஏலத்தில் கலந்து கொண்டு முறைப்படி கடையை குத்தகைக்கு ஏலம் எடுத்துள்ளார்.

ஆனால் நகராட்சி நிர்வாகத்திடம் இருந்து மேற்படி கடைக்கான எந்தவித ஒப்படைவு ஆணை பெறாமாலும், ஏலம் எடுத்ததற்கான எந்தவிதமான உத்தரவுகளை பெறாமல் மேற்படி ஏலம் எடுத்த கடையை பார்வையிட்ட பிறகு, சட்ட அலுவலகம் நடத்துவதற்கு போதிய வசதிகள் இல்லாததாலும், போக்குவரத்து நெரிசல் இருப்பதாலும், திருப்திகரம் இல்லாததாலும் கடையை சரண்டர் செய்ய முடிவு செய்து கடந்த 25.01.2023 அன்று ஏலத்தை இரத்து செய்துவிட்டு வைப்புத் தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்று மனு கொடுத்திருந்தார். அப்போதுதான் மேற்படி விவரம் எனக்கு தெரிய வந்தது. அதன்பின் ஏலம் இரத்து செய்யப்பட்டது. அதற்கான இழப்பீடு தொகையாக என் மனைவி செலுத்தியிருந்த வைப்புத் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுதாரர் கடந்த 27.01.2023 அன்று அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக எனக்கு நகரமன்ற துணைத்தலைவர் பதவி கிடைத்தது குறித்து பொறாமையினாலும், என்மீதும், நகரமன்ற தலைவர் மீதும் வன்மத்துடன் செயல்பட்டு கடந்த 27.01.2023 அன்று செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்தார். புகார் மனுவின் அடிப்படையில் உரிய விசாரணை செய்து முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்று முடிவு செய்யப்பட்டு அந்த புகார் மனு முடித்து வைக்கப்பட்டது. அதன்பின்னர் கடந்த சில மாதங்களுக்கு பிறகு மேற்படி கடையை குத்தகை மறு ஏலம் விடுவதற்கு நகரமன்ற தீர்மானம் முறைப்படி அனைத்து நகரமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலோடு தீர்மானம் இயற்றப்பட்டு முறைப்படி தினகரன் நாளிதழில் அறிவிப்பு செய்யப்பட்டு குத்தகை ஏலம் விடப்பட்டது. மேலும் அந்த ஏலத்தில் நானும் நகரமன்ற தலைவரும் கலந்து கொள்ளவில்லை.

என் மீது தொடர்ந்து வன்மமாக எனக்கு தொந்தரவு செய்யும் தீய எண்ணத்துடன் கடந்த 16.10.2023 அன்று மேன்மை பொருந்திய இம்முறைமன்ற நடுவரிடம் நான் என்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி எனது மனைவி சசிகலா பெயரில் நகராட்சி கடையை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தார் என்றும், நான் இந்த உண்மைகளை மறைத்து உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்று அதன் பின்னரும் இந்த கடையை நடத்தி வந்தேன் என்றும், உண்மைக்கு புறம்பாக சங்கதிகளை தெரிவித்துள்ளார்.

மேலும், நான் நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற துணைத் தலைவராக ஆவதற்கு முன்பே, நகராட்சி கடையை குத்தகைக்கு ஏலம் எடுத்ததாக முன்னுக்கு பின் முரணாக முறையீட்டு மனுதாரர் முதல் பாராவில் குறிப்பிட்டுள்ளார். நான் எந்த சூழ்நிலையிலும் நகராட்சி கடையை நகரமன்ற தேர்தலுக்கு முன்போ அதற்கு பின்போ எனது மனைவி பெயரில் நடத்தவில்லை. குற்ற முறையீட்டு மனுதாரர் மனுவில் எந்த இடத்திலும் நான் என்ன கடையை நடத்தி வந்தேன் என்று குறிப்பிடவில்லை.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரமன்ற தேர்தல் நடைபெற்றது 19.02.2022 அன்று ஆகும். மேற்படி நகராட்சி கடையை குத்தகை ஏலம் விடப்பட்டது 20.01.2023 ஆகும். அதன் பின்னர் மனுவின் இறுதி பாராவில் நன்கு சட்டம் தெரிந்த மற்றும் நோட்டரி வக்கீலாக உள்ள ஒருவர் அரசாங்க சொத்தை தன் குடும்பத்தார் பெயரில் வைத்திருந்ததை மறைத்து பதவிக்கு வந்ததற்காக தகுதி இழப்பு செய்ய வேண்டும் என்று மீண்டும் முரண்பட்ட சங்கதிகளை மாண்புமிகு முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்து கொள்வது என்னவென்றால், குற்ற முறையீட்டு மனுதாரர் மேன்மைமிகு தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் சுத்தமான கைகளோடு அணுகவில்லை என்று தெரிவித்து கொள்கிறேன்.

இந்த புகாரானது முழுக்க முழுக்க அரசியல் காழ்ப்புணர்ச்சி அடிப்படையில் பழிவாங்கும் எண்ணத்துடன் என் மீது தாக்கல் செய்யப்பட்ட முறையீடாகும். நான் பதவிக்கு வந்து இதுநாள் வரையில் சுயநலத்துடன் செயல்பட்டோ, அதிகார துஷ்பிரயோகம் செய்தோ, அரசுக்கு எந்தவித இழப்பும், இழுக்கும் ஏற்படுத்தவில்லை. குற்ற முறையீட்டாளர் தவறான தகவலை தெரிவித்து இருப்பதால் இந்த குற்ற முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறன் என தெரிவித்துள்ளார்.

9) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு அவரது வாக்குமூலம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, நகராட்சி ஆணையாளர் மற்றும் மேலாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகர்மன்ற துணைத் தலைவரின் வாக்குமூலம் மற்றும் அவரது கூடுதல் விளக்கங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரியை சார்ந்த மனுதாரர் திரு.ஜெ.குமரவேல் என்பவர் தனது 16.10.2023 நாளிட்ட மனுவில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி துணைத்தலைவர் திரு.G.K.லோகநாதன் என்பவர் தனது மனைவி திருமதி.சசிகலா என்பவரின் பெயரில் கடை எண்.14–ஐ விதிமீறி குத்தகைக்கு எடுத்து, அவசரமாக அக்கடையினை நகராட்சி ஆணையாளரிடம் திரும்ப ஒப்படைப்பு செய்து, வைப்புத் தொகையினை திரும்ப பெற்றுள்ளார் என புகார் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியால் அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி 04.01.2023 அன்று, பிறவற்றுள், நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேரூராட்சிகள் மறுமலர்ச்சி திட்ட (APAMT) கடைகளான 19 கடைகளை 2022 –2023 முதல் **2031 – 32** ஆண்டுகள் வரையிலான 9 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடும் வகையில் 04.01.2023 நாளிட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிடப்பட்டு 20.01.2023 அன்று

ஏலம் விடப்பட்டுள்ளது. இக்கடைகளில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கடை எண் 14–ம் அடங்கியுள்ளது.

மேற்கண்ட ஏலத்தில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திரு.G.K.லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி. சசிகலா என்பவரும் கலந்து கொண்டு, கடை எண்.14 ஐ அதிக ஏலத் தொகையான ரூ.7,800/– கோரியதால், திருமதி. சசிகலா என்பவருக்கு அக்கடையை 9 ஆண்டு காலத்திற்கு குத்தகை உரிமை வழங்க நகர்மன்றத்தில் பொருள் எண். 02, நாள் 25.01.2023–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி, ஏலதாரரான திருமதி. சசிகலா என்பவர் மேற்படி ஏலத் தொகை முழுவதையும் 25.01.2023 அன்றே வங்கி வரைவோலையாக நகராட்சியில் செலுத்தியுள்ளார்.

இந்நிலையில் திருமதி. சசிகலா என்பவர் தனது 25.01.2023 நாளிட்ட கடிதத்தில் தான் வழக்கறிஞராக பணிபுரிவதாகவும் தான் எடுத்த கடை எண். 14 ஐ வழக்கறிஞர் அலுவலகம் அமைப்பதற்கான போதிய இடவசதியின்மையால், தான் ஏலம் எடுத்த கடையினை திரும்ப ஒப்படைக்க விரும்புவதால் மேற்படி ஏலத்தை இரத்து செய்து, தனது வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறு நகராட்சி ஆணையரிடம் கோரியுள்ளார்.

நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி ஆணையாளர் கடித ந.க.எண்.248/2023/அ1 நாள் 27.01.2023–ல் நகர்மன்ற தலைவரின் முன்அனுமதியின்படி திருமதி. சசிகலா என்பவருடைய டேவணி தொகையை பறிமுதல் செய்து, அத்தொகை நகராட்சியின் பொதுநிதி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு கூடுதல் பொறுப்பு தொகை மட்டும் அன்னாருக்கு திரும்ப வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகர்மன்ற தீர்மானம் எண்.24, நாள் 31.03.2023–ல் APAMT கடை எண்.14 ஐ மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து, தனியார் (திருமதி. சசிகலா) செலுத்திய கூடுதல் பொறுப்புத் தொகை மட்டும் திரும்ப வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் புகாருக்குள்ளான கடை எண்.14 ஐ நகராட்சியால் மறு ஏலம் விடுவதற்கான அறிக்கை 11.08.2023 அன்று வெளியிடப்பட்டு, 24.08.2023–ல் நடைபெற்ற ஏலத்தில் அதிகபட்ச தொகை கோரிய திரு.S.முரளி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 50 (1) (d) ன்கீழும், தற்போது நடைமுறையில் உள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் பிரிவு 32 (1) (e) ன்கீழும், ஒரு உறுப்பினர் அல்லது ஒரு தலைவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, அவருக்காகவோ அல்லது அவரது பங்குதாரருக்காகவோ நகராட்சியில் நடைபெற்ற ஏதேனும் ஒப்பந்தப்பணியில் அல்லது நடைபெற்றுவரும் ஒப்பந்தப்பணியில் துணைபோயிருந்து ஆதாயம் பெறுகிறார் எனில், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டப்பிரிவு 35–க்கு உட்பட்டும் மற்றும் பிரிவு 12 (6) (c)–க்கு உட்பட்டும் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி வகிப்பதிலிருந்து நீக்கம் பெறுவார் என்று கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Tamil Nadu Urban Local Bodies Act, 1998 Section 32. Disqualification of Chairperson or Councilor:-**

(1) **Subject to the provisions of section 35, a Councilor or a Chairperson shall cease to hold office as such if he –**

**(a) xxx**
**(b) xxx**

**(e) subject to the proviso to clause (c) of sub-section (6) of section 12, acquires any interest directly or indirectly, by himself or his partner, in any subsisting contract made with or work being done for the Municipality.**

மேலும், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.35, நாள் 10.03.2000–ல் நகராட்சிகளில் பணிமதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளில் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு வழிகாட்டும் வகையில் "பொறியாளர் கையேடு" (Engineering Manual) வெளியிடப்பட்டது. இக்கையேட்டில் Chapter XII –ல் Project Management Consultant என்கிற தலைப்பில் Annexure –I-Rules for Registration of Contractors என்கிற உட்தலைப்பில் பத்தி 2–ல் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதில் தடை என்கிற தலைப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. **BAN ON UNREGISTERED CONTRACTORS AND EMPLOYEES FROM TENDERING:-**

**"No Contractor shall normally be allowed to undertake Government works, unless he is registered in the Departments according to rules prescribed. Ban on participating in tenders by the Government servants, their close relatives, Councilors, Mayor etc., and close relatives will apply".**

இந்நிலையில் நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சியில் 20.01.2023 அன்று நடைபெற்ற ஏலத்தில் நகராட்சிக்கு சொந்தமான கடை எண்.14 ஐ நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி நகர்மன்ற துணைத்தலைவர் திரு. ஜி. கே. லோகநாதன் என்பவரின் மனைவி திருமதி. சசிகலா என்பவர் கலந்து கொண்டு அதிகபட்ச தொகையான ரூ.7,800/– ஐ கோரியதன் அடிப்படையில் அன்னாருக்கு கடையினை ஒதுக்கீடு செய்து அக்கடையினை ஏலதாரரான திருமதி.சசிகலா என்பவருக்கு ஒப்படைப்பு செய்வதற்கு 25.01.2023 அன்று நகராட்சியின் நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திருமதி. சசிகலா என்பவர் 25.01.2023 அன்றே ஏலத் தொகையினை வங்கி வரைவோலையாக செலுத்தியுள்ளதன் மூலம் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்பிரிவு 50 (1) (d) ன் கீழும் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள பிரிவு 32 (1) (e)–ன் கீழும் உட்பட்டிருப்பதால், இப்பொருள் குறித்து தக்க மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய ஆவணங்களுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுப்பப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

2) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

3) ஆணையாளர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

4) திரு.ஜெ.குமரவேல்,
எண்.2/25, கன்னியப்பா நகர்,
ராஜேஸ்வரி தெரு, நந்திவரம் கூடுவாஞ்சேரி,
செங்கல்பட்டு மாவட்டம் – 603 202.

5) திரு. ஜி.கே. லோகநாதன்,
நகர்மன்ற துணைத்தலைவர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

05/01/24

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை - 600 032